# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
## அசல் வழக்கு எண். 5/2018

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | சின்னராஜ் | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. | கோனேரி | தொழில் | .. | தறி கூலி |
| வயது | .. | 34 | ஜாதி | .. | வன்னியர் |
| கிராமம் | .. | இடங்கணசாலை | நாள் | .. | 07.03.2022 |
| வட்டம் | .. | சங்ககிரி | | | |

1872 ஆம் வருடத்திய சட்டம் 1 ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியான திரு. சின்னராஜ் என்பவர், இந்நீதிமன்றத்தில் உதவியாளர் கிரேடு 3 ஆக பணிபுரியும் திருமதி. கோகிலா என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வா.சா.1 – சின்னராஜ் - முதல் விசாரணையின் தொடர்ச்சி.

1) 26.05.1943 தேதியிட்ட வாதியின் கொள்ளுதாத்தா கோனேரிக்கவுண்டர் பெயரில் உள்ள கிரயப்பத்திரம், ஆவண எண்.1532/1943, சான்றிட்ட நகல், வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 18.12.2015 தேதியிட்ட வாதியின் தந்தை கோனேரி அவர் பெயரில் பெருமாள் என்பவர் எழுதி வைத்த உயில் குறித்து சேலம் 3 வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் பெற்ற உத்தரவு, சான்றிட்ட நகல், வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 06.04.2017 தேதியிட்ட வாதி அசல் வழக்கு எண்.3/2017 இல் மாண்புமிகு சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் பெற்ற தீர்ப்பாணையை மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ததற்கான பதிவு நகல், வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) வாதியின் ஆதார் அட்டை, நகல், வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (உண்மை நகலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது).

(வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்பதாலும், வா.சா.ஆ.2, 3 ஆவணங்களில் 1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பினர்கள் இல்லை என்பதாலும், 1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் இந்த ஆவணங்களை குறியீடு செய்ய ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. ஆட்சேபனை குறித்து இந்த வழக்கின் இறுதி தீர்ப்பில் முடிவு செய்யப்படும்.)

1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 இன் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம் / சின்னராஜ்

ஒப்பம் / திரு. ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.